වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

2024

ජනමාධ්‍ය අංශය
வெகுசன ஊடகப் பிரிவு
Mass Media Division

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
Ministry of Health and Mass Media

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

(தலைப்பு 105 : வெகுசன ஊடக அமைச்சு)

2020.01.30 ஆம் திகதி அரச நிதித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்திற்கமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

	பக்கம்
அத்தியாயம் 01– நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	01 - 14
அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	15 - 36
அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	37 - 44
அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்	45- 48
அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	49 - 54
அத்தியாயம் 06 – மனித வள விபரம்	55 - 62
அத்தியாயம் 07– இணக்கப்பாட்டு அறிக்கை	63 - 72

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

1.3. பிரதான செயற்பாடுகள்

1.4. நிறுவன விளக்கப்படம்

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் /நிதியங்கள்

அ) கருத்திட்டத்தின் பெயர்

ஆ) கொடை வழங்கும் முகவர் நிறுவனம்

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு

ஈ) கருத்திட்டக் காலம்

1.0 வெகுசன ஊடக அமைச்சு

1.1 அறிமுகம்

நன்கு அறிவூட்டப்பட்ட, பன்முகத்தன்மை கொண்ட மற்றும் செயலூக்கமுள்ள சமூகத்தை உருவாக்கும் பொருட்டு சுதந்திரமான ஊடகப் பாரம்பரியத்தை மேம்படுத்தல் மற்றும் ஊடகத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான தலையீட்டை செய்வதற்கும் நாட்டு மக்களின் அறிவுத்தரத்தை முன்னேற்றத்தை நோக்கி அழைத்துச் செல்லக்கூடிய பொறுப்புணர்வுமிக்க ஊடகப் பயன்பாட்டுக்கு ஊடகத் துறையை வலுவூட்டுவதற்குத் தேவையான பங்களிப்பை வெகுசன ஊடக அமைச்சு தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. ஊடகத் துறையானது அளவு ரீதியாகவும் தரம் ரீதியாகவும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதை இந்தத் துறை நன்கு புரிந்துகொண்டுள்ளது.

ஊடகத்துறையின் முன்னேற்றம், பாரம்பரிய ஊடகக் கலைக்கு அப்பாற்பட்ட தகவல்களின் அடிப்படையிலான புதிய ஊடகப் பயணத்திலேயே தங்கியுள்ளது. சமூக ஊடகங்கள் உட்பட புதிய ஊடகங்களின் பயன்பாடு பற்றிய அறிவு, புரிதல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தேவையான வழிகாட்டல்கள் மற்றும் தகவல் தொடர்பு உத்திகளை சமூகமயமாக்குவதில் வெகுசன ஊடகப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

அரசுக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்களை மீண்டும் அவற்றின் பழைய நிலைக்கு மீட்டெடுக்க வேண்டிய கடினமான சவால் அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. தேசியப் பொருளாதாரத்திற்கு தொடர்ந்தும் சுமையாக இருக்கும், தொடர்ந்தம் நட்டத்தில் இயங்கிவரும் மற்றும் குறைவான பயன்பாட்டைக் கொண்ட அரசுக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்கள் மீது விசேட கவனம் செலுத்தி, அந்த நிறுவனங்களின் வணிக நோக்குநிலை மற்றும் நிதி ஒழுக்கம் தொடர்பில் மீளாய்வுசெய்து, ஒரு மூலோபாயத் திட்டத்தின் பிரகாரம் அந்தத் திட்டத்தை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயற்படுத்தி, பெறுபேறுகளை அடையும் பொறுப்பு உரிய நிறுவனங்களின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்தச் செயன்முறையின் கிட்டிய மேற்பார்வையும் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இந்த பொது நிறுவனங்களின் சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊடகம் மற்றும் தொடர்பாடல் துறையின் உலகளாவிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் ஊடக தரப்படுத்தலுக்கான தற்போதைய விதிமுறைகளை சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் சமூக மற்றும் கலாச்சார அடையாளங்களுக்கு விசேட கவனம் செலுத்தி அரசாங்கக் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் கீழ் ஊடகத் துறையில் முறையான வழிகாட்டலுக்காக ஒரு தேசிய ஊடகக் கொள்கையைத் (National Media Policy) தயாரிக்கும் பணி வெகுசன ஊடக அமைச்சினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஊடக அறநெறிக் (Media Ethics) கட்டமைப்பொன்றின் தேவையையும் இந்த அமைச்சு அடையாளம் கண்டுள்ளதோடு, அதற்கான மேல் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர் தொழில்வாண்மைக் கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்கும் பொருட்டு சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக அரச அனுசரணையுடன் ஊடக உயர் கல்வி நிறுவனம் 'இலங்கை பட்டய ஊடகவியலாளர்களின் நிறுவனம்' (Chartered Institute of Media Professionals of Sri Lanka) எனும் பெயரில் நிறுவனமொன்றை தாபிப்பதற்கான சட்டரீதியான பின்னணி உருவாக்கப்படுகின்றது. இந்த நிறுவனத்தினூடாக ஊடகவியலாளர்களுக்கு பட்டய அந்தஸ்தை வழங்குவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மையை அதிகரிக்கும் நோக்கில் 'எசிதிஸி' ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். பட்டப் படிப்பு அல்லது பட்டப் பின் படுப்பு பாடநெறிகளுக்கு ரூ. 200,000/- உம் சான்றிதழ் பாடநெறிகளுக்கு ரூ. 100,000/- உம் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிதிப் பங்களிப்பின் கீழ் சிறந்த ஊடக நெறிமுறைகளை நிறுவுவதற்கும் ஊடகவியலாளர்களின் தொழில்முறைத் திறனை அதிகரிப்பதற்கும் இந்த வருடத்தில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செய்தி இணையத்தளங்களை பராமரிப்பது முக்கியமானதாக கருதப்படுவதனால் இந்த இணையத்தளங்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் அமைச்சின் கீழ் உள்ள சுயாதீன குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஊடகவியலாளர்களினால் நிறைவேற்றப்படும் செயற்பணி மற்றும் அவர்களின் பங்களிப்பை பாராட்டும் வகையிலும் தரமான ஊடக கலாசாரமொன்றை உருவாக்கும் பொருட்டும் ஜனாதிபதி ஊடக விருது விழாவை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு விடயத்திற்கு அடிப்படையான சட்டங்களாக 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் என்பன காணப்படுகின்றன. இந்தச் சட்டங்களின் ஏற்பாடுகளின்படி தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வெகுசன ஊடக அமைச்சினால் வழங்கப்படுகின்றன.

ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்களின் சீரான தன்மையை ஏற்படுத்த பொதுவான மாதிரியை அறிமுகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப, வெகுசன ஊடக அமைச்சினது விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான காலாவதியான கட்டளைகளைத் திருத்தும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. தற்காலத்திற்கு ஏற்ற வகையில் உரிய சட்டங்களைத் திருத்துவதன்

மூலம், ஊடகத் துறையில் நிலவும் கடுமையான போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் அந்த நிறுவனங்கள் பலப்படுத்தப்படும்.

வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களை உள்நாட்டு ஊடகங்களில் ஒளிபரப்புவதற்கான அனுமதியை நிபுணர் குழு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

செய்தி வலைத்தளங்களைப் பதிவு செய்வதன் மூலமும், இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்கு வரி விதிப்பதன் மூலமும் வெகுசன ஊடக அமைச்சு திறைசேரிக்கு வருவாயை ஈட்டிக்கொடுக்கின்றது.

புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒத்திசை (Analog) முறையிலிருந்து டிஜிட்டல் (Digital) முறைமை வரையில் பயணிக்கும் உலகளாவிய போக்கிற்கு இலங்கையும் இசைவாக்கம் அடைதல் வேண்டும். ஒத்திசை தொழில்நுட்ப பாவனை மூலம் அதிர்வெண்களின் பரப்பு விரயமாகின்றது. அந்த அதிர்வெண் பரப்பை ஏனைய தொலைத்தொடர்பு சேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு உள்ள சந்தர்ப்பமும் தவறவிடப்படுகின்றது. அதற்கமைய ஜப்பான் நாட்டின் கடன் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல்மயமாக்கும் கருத்திட்டத்தை' (Digital Terrestrial Television Broadcasting – DTTB Project) நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமயப்படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக விடயப் பரப்புக்குரிய நிரல் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தகவல் சட்டம் தொடர்பில் அரசாங்க அலுவலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தகவல் அறியும் உரிமைப் பற்றிய பிரிவினால் அடையாளம்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2025-2029 காலப் பகுதிக்குள் இலங்கை அடைந்துகொள்ள உத்தேசிக்கும் அபிவிருத்தி குறிக்கோள்களின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் முன்னேற்றத்தை மேற்பார்வைசெய்து தேசிய அபிவிருத்தி முன்னுரிமை மற்றும் அந்த முன்னுரிமைகளுக்கு ஏற்ப துறைகளின் முன்னுரிமைகள் மற்றும் அந்த துறைகளை ஒன்றிணைத்து தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய உத்தேச முன்னேற்றம் அடையப்பெறுகின்றதா என்பதை பின்னூட்டம் செய்வதற்கான காலச் சட்டகம் (Organizational Results Framework – ORF) தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. செயலாற்றுகைச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுச் செயன்முறை ஊடாக நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை சிறந்த மட்டத்திற்கு அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

'Clean Sri Lanka' நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தனது நிகழ்ச்சித்திட்டங்ளை அடையாளம்கண்ட வண்ணம் உள்ளன. அதற்குத் தேவையான அறிவூட்டல் மற்றும் வழிகாட்டல் ஜனாதிபதி செயலகத்தினால் தற்போது வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 'Clean Sri Lanka' நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையதாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் பின்னூட்டம் செய்தல் மற்றும்

தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கு அமைச்சினால் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான ‘வளமான நாடு – அழகான வாழ்க்கை’ என்பதற்கு இசைவாக வெகுசன ஊடகப் பிரிவு தனது செயற்பாடுகளை அடையாளம்கண்டுள்ளது. இந்தச் செயற்பாடுகளை 5 வருட காலச் சட்டகத்தின் கீழ் நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழிற்பாட்டு செயன்முறையொன்று அடையாளம்காணப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வருடாந்த செயல்திட்டதுடன் மூலோபாயத் திட்டமொன்று கட்டியெழுப்பப்படும். அது ஜனாதிபதி செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் பின்னூட்டல் மற்றும் கண்காணிப்பு செயன்முறையுடன் இணைந்து செயற்படுத்தப்படும்.

அரசாங்க ஊடகங்களை பிரயோகிக்கும் போது தகவல்களின் நடுநிலைத்தன்மையைப் பாதுகாத்து பாதிப்பற்ற விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஊடகப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நோக்கு

"நன்றாக அறிவூட்டப்பட்ட பல்லின மற்றும் முனைப்பான சமூகம்."

பணிக்கூற்று

"மக்கள் நேயமுடன், அபிவிருத்தியை நோக்கிய சுதந்திரமானதும் பொறுப்புவாய்ந்ததுமான இலங்கைக்கான ஊடக கலாச்சாரத்தை ஸ்தாபிப்பதற்காக கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வகுத்தல், வசதியளித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டம் செய்தல்"

குறிக்கோள்கள்

- சிறந்த வெகுசன ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
- பொதுமக்களுக்கு தகவல்களை அடைந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
- ஊடகத் துறையை நவீன தொழில்நுட்பத்துடன் நாளதுவரைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.
- ஊடகத் தொழிற்துறையாளர்களின் தொழில் அந்தஸ்தை உயர்த்துவதற்கு உடந்தையாக இருத்தல்.
- தேசிய அபிவிருத்தி முயற்சியில் ஊடகப் பங்களிப்பு மற்றும் பங்கேற்பை அதிகரித்தல்.
- சர்வதேச ரீதியாக நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- அமைச்சின் நோக்கங்களை அடைவதற்கு தேவையான மனிதவள அபிவிருத்தியை கட்டியெழுப்புதல்.
- அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் சொத்துக்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல்.
- ஏற்புடை தரப்பினர்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் மொத்த அபிவிருத்தி செயன்முறையையும் வலுவூட்டல்.

1.3 வியடப் பரப்பு, பணிகள், செயற்பாடுகள் மற்றும் விசேட முன்னுரிமைகள்

1.3.1 விடயப் பரப்பு

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், அத்துடன் ஊடகப் பொருள் உள்ளிட்ட சரியான தகவல்களை அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும் தகவல் அறிவு மற்றும் சித்தாந்தங்களின் சமநிலையான தொடர்புக்கு பொருத்தமான ஊடக கலாச்சாரத்தை உருவாக்குதல். அத்தோடு அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் "ஒரு வெளிப்படையான ஊடக கலாச்சாரத்தை அறிமுகம் செய்வதற்கு" ஏற்புடைய சட்ட ஒழுங்கு விதிளுக்கு அமைவாக வெகுசன ஊடகத் துறைக்கான கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவுத்திட்டம், அரசாங்க முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்தல், பின்னூட்டம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

1.3.2 பணிகள் மற்றும் செயற்பாடுகள்

அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் பத்திரிகை மற்றும் தொடர்புடைய துறைகள் மற்றும் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் விடயப்பரப்பு தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல், செற்படுத்தல், பின்னூட்டம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- விடயப் பரப்பின் கீழ் உள்ள பொது சேவைகளை வினைத்திறனுடனும் நட்புறவு அடிப்படையிலும் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சின் வகிபாகத்தை நிறைவேற்றுவதை உறுதிசெய்ய நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- சரியான தகவல்களை அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அரசாங்க அச்சிடல் மற்றும் வெளியீடுகள்.
- மக்களின் அறிவு மனப்பான்மை மற்றும் இரசனையை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு வெகுசன ஊடகங்களின் பங்களிப்பிற்கு தேவையான மூலோபாயங்களை தொகுத்தல்.
- ஊடக பயன்பாட்டிற்கு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரித்தல்.
- ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்.
- அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் செய்திகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தத தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு இலங்கை பற்றிய பொருத்தமான தகவல்களை வழங்குதல்.
- வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு தேவையான தகவல் மற்றும் விளம்பர சேவைகளை வழங்குதல்.

- செய்திகள், திரைப்படங்கள் மற்றும் ஆவணப்பட நிகழ்ச்சிகளின் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- வர்த்தக தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் மற்றும் வெளிநாட்டு ஒளிபரப்புகள் உட்பட விளம்பர நடவடிக்கைகள்
- நவீன தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி பன்முகத்தன்மையின் மூலம் வர்த்தக நோக்கிலான நவீன அஞ்சல் சேவையை வழங்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அஞ்சல் சேவைகளை திறமையாகப் பேணுதல்.
- இலங்கைப் முத்திரைப் பணியகத்தின் நிர்வாகம்.
- திணைக்கள, நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயப் பரப்புகளுக்குமுரிய நடவடிக்கைகள்.
- திணைக்கள, நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபங்களின் மேற்பார்வை.

1.3.3 விசேட முன்னுரிமைகள்

- வெளிப்படைத்தன்மையுள்ள வெகுசன ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஊடகத் தரங்களை நிறுவுதல்.
- ஊடகவியலாளர்களின் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு கலாசார பெறுமானங்கள் மற்றும் விழுமியங்களின் வட்டத்தை மீறிச் செல்லாது செயலாற்றுவதற்கான பின்னணியை தயாரித்தல்.
- இலங்கைப் பத்திரிகைப் பேரவையை மீள்கட்டமைத்தல்.
- ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு மாகாண மட்டத்தில் நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கை அஞ்சல் சேவையை மக்கள் தேவைக்காக விஸ்தரித்தல்.
- சமூக ஊடகங்கள் உட்பட புதிய ஊடகங்களின் பயன்பாடு மற்றும் கையாளுதல் பற்றிய தொழில்முறை அறிவு மற்றும் புரிதலை வழங்க ஒரு சமூக கல்வி முறையை அறிமுகப்படுத்துதல்.
- சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஊடக உயர் கல்வி தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை நிறுவுதல்.
- நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் திறமையான மற்றும் வினைத்திறன்மிக்க மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் அஞ்சல் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கு தேவையான நுட்பங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தல்.

1.4 நிறுவன விளக்கப்படம் - 2024



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

i) அரசாங்க தகவல் திணைக்களம்

ii) அரசாங்க அச்சுத் திணைக்களம்

III) இலங்கை அஞ்சல் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

i) தகவல் அறியும் உரிமைப் பற்றிய ஆணைக்குழு

ii) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

iii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

iv) வ/ப சுயாதீன ரூபவாஹினி ஊடக வலையமைப்பு

v) வ/ ப ஐக்கிய பத்திரிகைக் கம்பனி (லேக் ஹவுஸ் நிறுவனம்)

vi) இலங்கைப் பத்திரிகைப் பேரவை

vii) இலங்கை மன்றம்

viii) இலங்கை அச்சக நிறுவனம்

ix) வ/ப லங்கா புவத் நிறுவனம்

x) இணையவழிமுறைகளின் பாதுகாப்புக்கான ஆணைக்குழு

xi) இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனம்

xii) இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்

xiii) பொது அரங்காட்டல் சபை

xiv) செலசினே மீடியா சொலூஷன் தனியார் நிறுவனம்

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், பொது அரங்காட்டல் சபை மற்றும் செலசினே மீடியா சொலூஷன் (தனியார்) கம்பனி என்பன இலக்கம் 2412/08 மற்றும் 2024.11.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

அ) கருத்திட்டத்தின் பெயர்: இலங்கையில் புவிசார் ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம்.

ஆ) கொடைவழங்கும் முகவர்: ஜப்பான் அரசு (JICA)

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ஜப்பான் யென் மில். 17,717
(JICA நிறுவனத்தின் பங்களிப்பு பெறுமதி ஜப்பான யென் மில். 13,717 உம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ஜப்பான் யென் மில். 3,505 உம் ஆகும்.)

ஈ) கருத்திட்டக் காலம்: 2021 – 2028

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 வெற்றிகள் - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் - 2024

2.1.1 2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனை சமூகமயப்படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக அமைச்சுக்குரியதாகும். 2017 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகளை நன்றாக செயற்படுத்துவதும் அதனூடாக ஊழலற்ற சிறந்த பொறுப்புள்ள அரசாங்க சேவையை நிறுவுவதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தச் சட்டத் தை சமூகமயப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து வெகுசன ஊடக அமைச்சு முனைப்புடன் பங்களிப்புச் செய்துள்ளது.

2016 இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைய வெகுசன ஊடக அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் தகவல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் தகவல்களைக் கோரும் முறையின்படி ஆணைக்குழு ஒருங்கிணைக்கப்பட்டது. இதுவரை, ஆண்டு மற்றும் அரையாண்டு அறிக்கைகள் மற்றும் இருமாத நிலமை அறிக்கைகள் 20 தகவல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, பிரஜைகள் அல்லது பொது அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்த தகவல்கள் மற்றும் தகவல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறுபட்ட கோரிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுபப்பட்டுள்ளன.

2.1.2 தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குதல்

2024 ஆம் ஆண்டில் இது தொடர்பாக முறையான ஆலோசனை சேவைகள் தினசரி அடிப்படையில் வழங்கப்படுகின்றது. 2024.12.31 ஆம் திகதிக்குள் கிட்டத்தட்ட 930 நபர்களுக்கு முறையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் சட்டம் தொடர்பாக பிரஜைகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதுடன், தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து ஆய்வு செய்யவும் ஆராய்ச்சி செய்யவும் வருகைத்தரும் பிரஜைகளை அறிவூட்டுவதே முக்கிய நோக்கமாகும்

2.1.3 உத்தியோகபூர்வ தகவல் அறியும் உரிமை இணையதளத்தை (www.rti.gov.lk) பேணிவரல் மற்றும் இற்றைப்படுத்தல்

பிரஜைகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை திறம்பட பயன்படுத்த வசதியளிப்பதே இதன் நோக்கமாகும். தகவல் அறியும் உரிமை குறித்த பிரஜைகளின் விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் தகவல் கோரிக்கைகளை பொதுமக்களுக்கு வழங்குவதும் இதன் நோக்கமாகும். தகவல் உரிமைகள் பற்றிய உத்தியோகபூர்வ செய்திகளை வெளியிடுவதும் எதிர்காலத்தில் நடைப்பெறவுள்ள நிகழ்வுகளை விளம்பரப்படுத்தும் பணி என்பன இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் அறியும் உரிமையை மிகவும் பயனுள்ளதாகவும்

திறமையாகவும் வழங்குவதற்கு அமைச்சின் உத்தியோகத்தர்களின் கீழ் இயங்கும் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது

2.1.4 தகவல் அறியும் உரிமை தொடர்பான மின்னஞ்சல் (info@rti'gov'lk) பராமரித்து புதுப்பித்தல்

தகவல் அறியும் பிரிவில் பயன்படுத்தப்படும் மின்னஞ்சலுக்குப் பதிலாக புதிய மின்னஞ்சல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலம் பிரஜைகளினால் அனுப்பப்படும் தகவல் கோரிக்கை விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்படும். மேலும், பிரஜைகள் மற்றும் அரசாங்கத்துறை அதிகாரிகளினால் அவர்களின் பிரச்சனைகளுக்கு பதில் கேட்டு அனுப்பப்படும் மின்னஞ்சல்களுக்கு தொடர்ச்சியாக பதில் அனுப்பப்படுகின்றது.

2.1.5 தகவல் அறியும் உரிமை பற்றிய தகவல் அலுவலர் கையேடு மற்றும் பயிற்சி வழிகாட்டி மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பிரஜைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் 23 பயிற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும் 6669 உத்தியோகத்தர் கையேடுகள், பயிற்சி வழிகாட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பங்கேற்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்த வெளியீடுகளின் விநியோகம் மூலம் நிறுவனங்களில் உள்ள தகவல் அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2.1.6 பொது அதிகாரசபைகளின் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களின் தரவுத் தளத்தை (Data Base) இற்றைப்படுத்தல்

பொது அதிகாரசபை மூலம் அறிவிக்கப்படும் தகவல் அலுவலர்கள் மற்றும் மேன்முறையீட்டு அலுவலர்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட தரவுத் தளத்தை ^Data Base& அடிப்படையாகக் கொண்ட தகவல்கள் எமது இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதோடு, இந்தத் தகவல்கள் நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன. 2024.12.31 ஆம் திகதியளவில் 4231 தரவுகள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.7 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முகநூல் பக்கத்தைப் Facebook பராமரித்தல் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்தல்

விசேடமாக இளைஞர்கள் மற்றும் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் RTI Facebook பக்கம் மூலம் கவர்ச்சிகரமான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுறது. 2024 ஆம் ஆண்டு வரை இந்தப் பக்கத்தை அணுகியுள்ள மொத்த பயனர்களின் எண்ணிக்கை 3620 ஆகும். மேலும், தகவல் அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தும் போது அன்றைய தினம் முகநூல் பக்கத்தில் Facebook தகவல் வெளியிடப்படும். தற்போது 2024 ஆம் ஆண்டில்

மாத்திரம் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான 15 இடுகைகளின் விபரங்கள இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

2.1.8 தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு தகவல் சட்டம் குறித்த 16 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன, அதில் பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2105 ஆகும்.

2.1.9 சர்வதேச தகவல் அறியும் உரிமைத் தினத்தைக் கொண்டாடுதல் - 2024

அ) 2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தகவல் தினக் கொண்டாட்டம் செப்டம்பர் 28 ஆம் திகதி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தேர்தல் காலம் காரணமாக, இந்தக் கொண்டாட்டம் சர்வதேச மனித உரிமைகள் தினமான 2024.12.10 ஆம் திகதி அன்று கௌரவ சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சரின் தலைமையில் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கணி மண்டபத்தில் நடைபெற்றது.

ஆ) அனைத்து அமைச்சகங்களிலிருந்தும் தகவல் உத்தியோகத்தர்கள் மற்றும் விடய உத்தியோகத்தர்கள் 350 இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இ) 2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தகவல் தின கொண்டாட்டத்துக்கு இணைவாக கல்வி அமைச்சுடன் இணைந்து அகில இலங்கை பாடசாலை மற்றும் திறந்த சுவரொட்டி சித்திரப் போட்டி, அகில இலங்கை பாடசாலை குறும்படப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஈ) முக்கியமான தகவல்களை வெளியிடுவது தொடர்பாக அனைத்து அமைச்சுக்களின் செயல்திறன் குறித்து வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்துடன் ஒரு ஆய்வு நடத்தப்பட்டு, ஏற்புடைய ஆய்வு அறிக்கை 2024.12.10 ஆம் திகதி வெளியிடப்பட்டது

2.1.10 'பவத்த' இதழ் வெளியீடு.

'பவத்த' செய்தித்தாள் 2024.12.10 ஆம் திகதி லேக் ஹவுஸ் நிறுவனத்தால் தினமின மற்றும் தினகரன் செய்தித்தாள்களுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறப்பு இதழாக வெளியிடப்பட்டது. மேலும் அதே நேரத்தில் இணையத்திலும் வெளியிடப்பட்டது.

2.1.11 தேசிய ஊடக கொள்கையொன்றைத் தயாரித்தல்

ஊடகத்துறையில் முறையான வழிகாட்டலுக்கான தேசிய ஊடக கொள்கையொன்றை தயாரிப்பதற்கான பணிகளை வெகுசன ஊடக அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது. இதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச ஊடகப் பொறுப்பாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், சட்டத்தணிகள், இலத்திரனியல் வெளியீட்டாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் எழுத்தாளர் குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அக்குழுவினால் அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் இது தொடர்பான கருத்துக்களைப் பெறுவதற்காக பின்வரும் 07 விசேட மையக் குழுக்களின் கீழ் தற்போது கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

i. ஆய்வாளர்கள்
ii. ஊடக சங்கங்கள்
iii. உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள்
iv. அச்சு மற்றும் இலத்திரனயில் ஊடக நிறுவனங்கள்
v. வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள்
vi. கிழக்கு மாகாண அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள்
vii. பாடசாலை ஊடக சங்கங்கள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஊடகத் துறையுடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கருத்துக்களைப் பெறுவது மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டதால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் 02 குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதன் மூலம் அந்தப் பகுதிகளுக்குரிய பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு புதிய யோசனைகள்/பரிந்துரைகள் பெறப்பட்டன.

முறையான நடைமுறைகளைப் பின்பற்றி தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட யோசனைகள்/பரிந்துரைகளை இணைத்து, ஊடகத் துறையில் தற்போது காணப்படும் பொதுவான பலவீனங்களை களைந்து, மேலும் ஊடகத் துறையை புதிய திசையில் வழிநடத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட தேசிய ஊடகக் கொள்கையின் ஆரம்ப வரைவு தேவையான எதிர்காலப் பணிகளுக்கான பரிந்துரைகள் 2024.03.28 ஆம் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

2.1.12 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) மானியத்தின் கீழ் வெகுசன ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

வெகுசன ஊடக அமைச்சு 2021 நவம்பர் 29 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துடன் (UNDP) இணைந்து, Secretary General's Peace Building Funds திட்டத்தின் கீழ் Countering Hate Speech through Education & Advocacy for Improving Social Cohesion in Sri Lanka (PBF) கருத்திட்டத்திற்காக கையெழுத்திடப்பட்டது. அத்தோடு 2023.05.12 ஆம் திகதி மேலும் 09 மாதங்களுக்கு கருத்திட்டத்தை நீடிப்பது தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தின் நிதிப் பங்களிப்பின் கீழ், ஊடக நிருவாகிகள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்கள் ஆகிய குழுக்களுக்கு சிறந்த ஊடக நெறிமுறைகளை நிறுவுதல் மற்றும் ஊடகவியலாளர்களின் தொழில்முறையை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று இத்திட்டத்தின் வளவாளர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த செயற்திட்டத்தின் முதற்கட்டமாக, “அறிக்கையிடலின் ஆரம்பம் மத்தி முடிவு” என்ற தொனிப்பொருளில் இலத்திரனியல் ஊடகத் தலைவர்கள் மற்றும் அச்சு ஊடகத் தலைவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமானது கௌரவ வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் தலைமையில் இந்த வருடம் ஆகஸ்ட் 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் கொழும்பில் ஷங்கிரிலா ஹோட்டல் வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. அங்கு சிறந்த ஊடக நெறிமுறைகளுக்கான குறைந்தபட்ச இணக்கப்பாடுகள் வரைவு செய்யப்பட்டன.

இரண்டாவது இலக்குக் குழுவாக ஊடக நிறுவனங்களின் செய்தி அறைகளில் (News Room) விசேட பங்களிப்பை வகிக்கும் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் 2023.09.27 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. சிறந்த ஊடக நெறிமுறைகளுக்கான குறைந்தபட்ச தரநிலைகள் குறித்து நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய பிராந்திய ஊடகவியலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் 09 மாகாணங்களையும் உள்ளடக்கி 373 பிரதேச ஊடகவியலாளர்களுக்கான பயிற்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

2.1.13 அரசாங்க அனுசரணையுடன் ஊடக உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவுதல்

ஊடகத்துறையில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் நிபுணத்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் ஊடகத்துறை அமைச்சின் அனுசரணையில் இலங்கையின் பட்டய ஊடக வல்லுநர்கள் நிறுவகம் (Chartered Institute of Media Professionals of Sri Lanka) என்ற பெயரில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு இணையான ஒரு சுயாதீன நிறுவனமாகும். தற்போது இந்த நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டமூலம் இறுதி செய்யப்பட்டுள்ளதுடன் தேவையான அனுமதிகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கான பட்டயம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கான வழிமுறையும் மேற்படி சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு தொழில்முறை உயர்கல்வி நிறுவனமாக மாறாமல் இந்த ஊடக நிறுவனம் திறமையான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக வல்லுநர்களுக்கு அறிவு மற்றும் திறன்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.1.14 ஜனாதிபதி ஊடக விருது விழா - 2024

ஊடகவியலாளர்களின் பணி மற்றும் பங்களிப்பைப் பாராட்டுவதற்கும் தரமான ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை வெகுசன ஊடக அமைச்சு நடத்தியது. இந்த விருது வழங்கும் விழாவில் வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் இணையத்தளங்கள் ஆகிய 04 துறைகளில் 51 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அதன் பின்னர், ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், வருடாந்தம் போதிய நிதி ஒதுக்கப்படாத

காரணத்தினாலும் Covid - 19 தொற்று மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியாலும் இந்த விழாவை 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நடத்த முடியாமல் போனது.

2024 தேசிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து 20 மில்லியன் ரூபா 2024 ஆம் ஆண்டு விருது வழங்கும் விழாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 2023 ஆம் ஆண்டுக்கான ஆக்கங்களை பராட்டும் முகமாக "ஜனாதிபதி ஊடக விருது 2024" விழாவை நடாத்துவதற்கு அப்போதைய அமைச்சரிடமிருந்து 2024.10.01 ஆம் திகதி அனுமதி பெறப்பட்டது. அதற்கமைய, 2024.10.08 ஆம் திகதி அனைத்து தனியார் மற்றும் பொது ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் வரவழைக்கப்பட்டு, 'ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழா 2024' தொடர்பில் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

"ஜனாதிபதி ஊடக விருது விழா 2024" 06 போட்டிப் பிரிவுகளின் கீழ் 50 விருதுகளும், 04 வாழ்நாள் விருதுகளும் உள்ளிட்ட 54 விருதுகளுக்காக 2023 ஆம் ஆண்டுக்கான ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதோடு, சுமார் 1005 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
அதற்கிணங்க, செயற்குழு நியமிக்கப்பட்டு, தேவையான நிறுவனப் பணிகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் துறையில் நிபுணர்களைக் கொண்ட நிபுணர் குழுவால் விருதுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விழாவை நடத்துவதற்கான மேலதிகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.1.15 செய்தி இணையத்தளங்களை பதிவுசெய்தல்

இலக்கம். 12/1037/37/019-1 மற்றும் 2012.08.13 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, செய்தி இணையத்தளங்கள் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு இணையதளப் பதிவுக்கும் ரூ.25,000.00 மற்றும் வருடாந்த பதிவு புதுப்பித்தலுக்கு ரூ.10,000.00 அமைச்சுக்கு வரவு வைக்கப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டில் அமைச்சின் கீழ் 27 செய்தி இணையதளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் 37 செய்தி இணையதளங்கள் தங்கள் பதிவை புதுப்பித்துள்ளன.

2.1.16 வானொலி மற்றும் தொலைகாட்சி ஒளிபரப்புக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்புகளுக்கு தாக்கம் செலுத்தும் சட்டங்களாக முறையே 1996 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் என்பன காணப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களுக்கமைய தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளை நடாத்துவதற்கு இந்த அமைச்சினால் தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2024 டிசமபர் 31 ஆம் திகதியளவில் செயற்பாட்டிலுள்ள தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அலைவரிசைகளின் எண்ணிக்கை

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	அலை வரிசைகளின் எண்ணிக்கை
வானொலி	18	51
புவிசார்ந்த தொலைக்காட்சி	16	24

சேவை வழங்கும் நிறுவனங்கள்

அனுமதிப்பத்திர வகை	அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை
கேபல் தொலைக்காட்சி	06
செயற்கைகோள் தொலைக்காட்சி	03
இணையத்தள அடிப்படையிலான தொலைக்காட்சி	03
மொத்தம்	**12**

மேலும், இரண்டு அரசாங்க ஒலிபரப்பு நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக பிராந்திய சேவைகளும் உள்ளிட்ட ஒலிபரப்பு அலைவரிசைகள் 15 பேணப்பட்டு வருகின்றன. அத்தோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஊடாக 05 தொலைக்காட்சி சேவைகள் பேணப்பட்டுவருகின்றன. பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உச்சமாக பாதுகாக்கும் அதே வேளையில் சிறந்த ஊடக பாதுகாப்பிற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுமதிப்பத்திரங்களுக்கு ஒருமித்த கருத்தை உருவாக்கும் நோக்கில் பொதுவான மாதிரியொன்றை அறிமுகப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போது, வெகுசன ஊடக அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு வானொலி மற்றும் தொலைக்காட்சி அனுமதிப் பத்திரங்களை மீளாய்வு செய்து தயாரிக்கப்பட்ட பொது மாதிரிப் படிவம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2.1.17 பிராந்திய ஊடகவியலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் –Journalism with Care

குழந்தைகள் பற்றிய ஊடக அறிக்கையிடல் குறித்து பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் டிசம்பர் மாதத்தில் 166 பிராந்திய ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்பட்டன. இது UNICEF நிறுவனத்தின் நிதி உதவியுடன் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி மற்றும் காலி மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டன.

நெறிமுறைசார் அறிக்கையிடலை ஊக்குவிப்பதற்கும் அதன் மூலம் சிறந்த ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் தொடர்புடைய சட்ட விதிகள் குறித்து பிராந்திய ஊடகவியலாளர்களை அறிவூட்டுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

2.1.18 பெண்கள் மற்றும் இன-மத சிறுபான்மையினரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் வகையில் பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்துதல்

பெண்கள் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கான இலங்கை தேசிய செயல் திட்டத்தின் 2023-2027 கீழ், பெண்கள் மற்றும் இன மற்றும் மத சிறுபான்மையினரின் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்தும் பணி இந்த அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் அந்தக் குழுவால் வரைவு செயல்முறை முடிக்கப்பட்ட பின்னர் தரப்பினர்களின் கருத்துக்கள் வினவப்படவுள்ளது

2.1.19 "எசிதிஸி" வெகுசன ஊடக புலமைப் பரிசில் திட்டம்

ஊடகவியலாளர்களின் தொழில்வான்மையை அதிகரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட எசிதிசி ஊடக புலமைப் பரிசில் திட்டம் வருடாந்தம் வெகுசன ஊடக அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது.

மூன்று வருட சேவையை நிறைவுசெய்து, நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் பணியாற்றும் 18-55 வயதுக்கு இடைப்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திரமான ஊடகவியலாளர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் இணைய ஊடகவியலாளர்கள்; இந்த உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், கோரப்படும் பாடநெறி நேரடியாக பத்திரிகைத் துறையுடன் தொடர்புடைய பாடமாக இருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பதாரர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் தங்களுக்கு வழங்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் ஒரு பட்டப் படிப்பை அல்லது முதுகலைப் பட்டத்தை தொடர்வதற்கு ரூ.200,000 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனத்தின் கீழ் குறுகிய கால அல்லது நீண்ட கால சான்றிதழ் பாடநெறியைத் தொடர்வதற்கு ரூ.100,000 வழங்கப்படுகின்றது. பாடநெறியின் தொடக்கத்தில் 50% கட்டணமும் எஞ்சிய தொகை இரண்டு தவணைகளிலும் வழங்கப்படும்.

இலவசமாக வழங்கப்படும் இந்த புலமைப் பரிசில் திட்டம் ஊடகவியலாளர்களுக்கு இருமுறை நலன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. முதல் சுற்றுக்கு தகுதிபெற்று படிப்பை முடித்த பின்னர் ஐந்து (05) ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது சுற்றுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை ஊடகவியலாளர்களுக்கு வழங்குகிறது.

இந்தத் திட்டம் 2006 முதல் தொடர்ந்து இயங்கி வருகிறது. 2024 ஆம் ஆண்டு வரை 1033 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்கு பொதுத் திறைசேரியிலிருந்து 05 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் புலமைப் பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பொருத்தமான ஊடகவியலாளர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவுசெய்யப்படுகின்றனர்.

2.1.20 இறக்குமதி செய்யப்படும் டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடுதல்

இந்த அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி அறவிடப்படும்.

2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் இறக்குமதி செய்யப்பட்ட டெலி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக நிகழச்சிகள் 1920 க்கு தடைநீக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அறவிடப்பட்ட வரித்தொகை ரூ.மில். 121.35 ஆகும். அந்தத் தொகை திரட்டு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக ஆய்வுச் சபையின் உறுப்பினர்கள் 28 பேர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு நாளாந்தம் மூவரைக் கொண்ட உப குழுக்கள் மூலம் 316 தடவைகளில் தடைநீக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வரி அறவிடப்பட்ட மற்றும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சிகளின் வகை	வரி விலக்களிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	வரி அறவிடப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	வரி வருமானம் (ரூ.மில்)
திரைப் படங்கள்	1126	40	4.8
டெலி நாடகம் மற்றும் விவரண நிகழ்ச்சிகள்	123	543	88.95
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள்	-	88	27.6
மொத்தம்	**1249**	**671**	**121.35**

2.1.21 ஊடக விடயப் பரப்புக்குள் வரும் இணைந்த நிறுவனங்களின் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்தல்

அமைச்சின் கீழ் வரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ்

லிமிடெட் (லேக் ஹவுஸ்), இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் இலங்கை மன்ற நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் நிறுவன யாப்புகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தேவைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளன. அண்மைய காலங்களில் எந்தவித மதிப்பாய்வும் செய்யப்படவில்லை. அத்துடன் அஞ்சல் திணைக்களம், அரசாங்கத் தகவல் திணைக்களம் மற்றும் அரச அச்சகத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் தமது அன்றாட கடமைகளில் பயன்படுத்தும் கட்டளைகள் சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இயற்றப்பட்ட கட்டளைகள் ஆகும். தற்போதைய தேவைகளுக்கு அமைய தனியார் துறை போட்டித் தன்மையுடன் நீண்ட தூரம் பயணித்துள்ள நிலையில் காலாவதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சிக்கித் தவிப்பதால் அரச ஊடகங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் முன்னேற்றம் மந்தமடைந்துள்ளது.

மேலும், இந்த அமைச்சின் விடயப்பரப்புக்குள் வரக்கூடிய விதிமுறைகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு திருத்தப்பட்டு, வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப சமூக ரசனைகளுக்கு ஏற்ப ஊடகத்துறையில் நிலவும் கடும் போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். சுயாதீனமாக வளர்வதற்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்புகளுக்கு இடமளித்து ஏற்கனவே உள்ள சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

ஊடக அமைச்சின் கீழ் உள்ள இணைந்த நிறுவனங்களின் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தும் பணியில் முன்னேற்றம்

(அ) 1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மன்றச் சட்டத்தை திருத்துதல்

அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் இந்தச் சட்டம் 2024.04.01 ஆம் திகதி திருத்தத்திற்காக சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய, திருத்தப்பட்ட ஆரம்ப வரைவு சட்ட வரைஞரால் 2024.09.18 ஆம் திகதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தற்போதைய அமைச்சரவையின் அனமதி தேவை என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை மன்றத்தின் தற்போதைய ஆளுகை சபைக்கும் அறிவிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தின் திருத்தம்

இலங்கை பத்திரிகை பேரவைச் சட்டத்தை அச்சு ஊடகங்களுக்கு மாத்திரம் ஏற்றவாறு திருத்தியமைப்பதற்கு கவனம் செலுத்தி வரைவு செய்யப்பட்ட சட்டம், 2023.10.31 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக அந்த நேரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தில் திருத்தம் செய்வது காலத்தின் தேவை என்பதால், அதை மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ஈ) தபால் திணைக்களச் சட்டத்தில் திருத்தம்

- 1989 ஆம் ஆண்டின் இல. 09, 1943 ஆம் ஆண்டின் இல. 23, 1952 ஆம் ஆண்டின் இல. 56, 1958 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1931 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தபால் நிலைய பிணை நிதிய கட்டளைச் சட்டம் - 473 ஆம் அதிகாரத்தை திருத்துதல்.

அமைச்சரவையினால் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞரால் தற்போது வரைவு சட்டமூலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படுகின்றன. அது தொடர்பில் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி அவசியமென சட்ட வரைஞரால் அமைச்சுக்கு 2024.10.01 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 1955 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, 1957 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மற்றும் 1973 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1908 ஆம் ஆண்டின் அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்ட இல. 11 இன் 190 ஆம் அதிகாரத்தை திருத்துதல்.

அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டத் திருத்தக் குழுவினால் அஞ்சல் கட்டளைச் சட்டத்தின் 88 பிரிவுகளைப் பற்றி கலந்துரையாடி சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்களைக் கருத்தில் கொண்டு இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(உ) இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் Chartered Institute of Media Professionals - Sri Lanka என்ற பெயரில் உயர் கல்வி ஊடக நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்தை தயாரித்தல்.

உயர் தொழில்முறை திறன்களைக் கொண்ட ஊடக வல்லுநர்களை உருவாக்குவதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ப உயர்கல்வி நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டமூலம் அமைச்சரவையினால் 2022.08.23 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகளை உள்ளடக்கிய இறுதி வரைவு தற்போது சட்ட வரைஞரால் வரையப்பட்டு வருகின்றது. இருப்பினும், இந்தச் சட்டத்தின் பணிகளைத் தொடர தற்போதைய அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், சட்ட வரைஞரால் 2024.10.10 ஆம் திகதி அறவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஊ) இலத்திரனியல் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டம் (Establishment of the Broadcasting Regulatory Commission Act)

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் அதிகபட்ச பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், உகந்த ஊடகப் பரவலை உறுதி செய்யும் நோக்கத்துடன், இலத்திரனியல் ஊடகங்களுக்கான 'இலத்திரனியல் ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தை' அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்திற்கு 2023.11.28 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, இறுதி வரைவை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தயாரிக்கப்பட்ட முதற்கட்ட வரைவு, சட்டமா அதிபரின் அவதானிப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சட்டமா அதிபரின் அவதானிப்புகள் 2024.11.01ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அவ்வாறே, முன்மொழியப்பட்ட ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்திற்கு இணையாக, 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகியவை திருத்தப்பட வேண்டியிருப்பதால், சட்ட வரைஞரால் அந்த வரைவுப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த இரண்டு சட்டங்களுக்கும் புதிய அமைச்சரவையின் அனுமதி தேவை என சட்ட வரைஞரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ) திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தை திருத்துதல்

திரைப்படத் துறை ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. மேலும் இந்தத் துறையை மீட்டெடுக்க ஒரு சுயாதீன ஒழுங்குமுறை அமைப்பை நிறுவுவதற்காக ‘இலங்கை தேசிய திரைப்பட அபிவிருத்தி ஆணைக்குழு’ சட்டம் வரைவு செய்யப்பட்டது. இந்த வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 'தேசிய திரைப்பட அபிவிருத்தி ஆணைக்குழு' என்ற பெயருக்குப் பதிலாக ‘Film Sri Lanka’ என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கு 2024.07.30 ஆம் திகதிய அமைச்சரவை முடிவின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் முடிவின் பிரகாரம் ஆரம்ப வரைவு 2024.08.06 ஆம் திகதி சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டமூலத்தை மேலும் வரைவு செய்வதற்கு தற்போதைய அமைச்சரவையின் அனமதி தேவை என சட்ட வரைஞரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.1.22 பொது அரங்காட்டல் சபை

இலங்கை சமூகத்திற்கு தாக்கம் செலுத்தும் பொது அரங்காட்சிப்படுத்தல்கள் தொடர்பில் உள்நாட்டுத் திறைப்படங்கள், நாடகங்கள் மற்றும் அனைத்து பொதுக் காட்சிப்படுத்தல்கள் என்பன பொது அரங்காட்டல் சபை சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு காண்பிப்பதற்குப் பொருத்மானவையா என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்படும்.

2024 ஆம் ஆண்டில் அவதானிப்புச் செய்யப்பட்ட மொத்த திரைப்படங்களின் எண்ணிக்கை 216 ஆகும். மேடை நாடகங்களின் எண்ணிக்கை 306 ஆகும். அவதானிக்கப்பட்ட DVD களின் எண்ணிக்கை 90 ஆகும். பாட்டுக் கச்சேரிகளின் எண்ணிக்கை 642 ஆகும்.

2024 ஆம் ஆண்டில் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களுக்கு பொதுத் திறைசேரியிலிருந்து ரூ.மில். 19 வழங்கப்பட்டுள்ளது. செலவினம் ரூ.மில். 14.30 ஆகும். உழைப்பு 75% ஆகும். 2024 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் மூலம் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ.மில். 10.18 ஆகும். Digital Cinema Package (DCP) இயந்திரம் மற்றும் சினிமா – திரையைப் பொருத்தி ஆரம்பகட்ட நடவடிக்கைகளை நிறைவுசெய்தல், புதிய சினிமா திரையரங்குகளின் புதுப்பித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் இயந்திரம், திரை மற்றும் ஒலித் தொகுதியைப் பொருத்துவதற்குத் தேவையான ஆரம்பகட்ட வேலைகளை நிறைவுசெய்தல்.

2.1.23 இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல்

புவிசார்ந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு (Analog) முறையிலிருந்து டிஜிட்டல் (Digital) முறைக்கு மாறுவதற்கான உலகளாவிய போக்குக்கு இலங்கையும் மாற்றமடைய வேண்டும். தற்போதுள்ள தொழில்நுட்பம் படிப்படியாக காலாவதியாகி ஒளிபரப்பு முறையை பராமரிப்பது மற்றும் கூடுதல் தொலைக்காட்சி அலைவரிசைகளின் தேவையை பூர்த்தி செய்வது போன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இல்லையெனில், மிகவும் திறமையான டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பம் உள்ள போது, (Analog) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அதிர்வெண் (frequency spectrum) வரம்பை வீணடிக்கும். அந்த அதிர்வெண்களின் வீச்சை ஏனைய தொலை தொடர்பு சேவைகளுக்குப் பயன்படுத்தும் சந்தர்ப்பமும் இல்லாமல் போகின்றது.

அதிகமான நாடுகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நோக்கி நகர்வதால், (Analog) ஒளிபரப்பு சாதனங்கள் (Transmitter) வெளிநாட்டு சந்தைகளில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எனவே, அதற்கான தகவல் தொடர்பு சாதனங்களை உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து நமது தேவைக்கேற்ப அதிக விலை கொடுத்து தயாரிக்க வேண்டியுள்ளது. மேலும், புதிய சாதனங்களை கொள்வனவு செய்யும்போது, இந்த சாதனங்களின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக அதிக அளவு அன்னியச் செலாவணியை செலவிட வேண்டியுள்ளது. அது அனைத்து ஊடக நிறுவனங்களும் அரசும் எதிர்கொள்ளும் பெரிய சவாலாகும். மேலும், இந்த தகவல் தொடர்பு சாதனங்களின் மின்சார செலவும் மிக அதிகம். எனவே, இந்த சேவையை இப்படியே தொடர்வதால் சேவை நிறுவனங்களின் செலவு அதிகரிக்கும்.

மேலும், கட்டண தொலைக்காட்சி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இருந்த போதிலும் அந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களின் கட்டணங்கள் காரணமாக பெரும்பாலான குடும்ப அலகுகள் இன்னும் (Analog) ஒளிபரப்பு சேவைகளில் தங்கி உள்ளன.

2009 ஆம் ஆண்டில் DVB - T தொழில்நுட்பம் 2010 ஆம் ஆண்டில் DVB – T2 தொழில்நுட்பத்தின் கீழ் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC) மூலம் தற்போதுள்ள நிலப்பரப்பு (Analog) தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் (Digital) தொலைக்காட்சிக்கு மாற்றி அந்த ஒளிபரப்பை கருத்திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதி பற்றாக்குறையால் கருத்திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது.

2009 ஆம் ஆண்டு முதல் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து டிஜிட்டல் செயலாக்கத்தை (Digitalization) செயல்படுத்துவதில் முன்னணியில் வெகுசன ஊடக மற்றும் தொழில்நுட்ப அமைச்சு செயற்பட்டது. தொழில்நுட்பத் தரங்களை நிலைநிறுத்தி எண்ணியல் செயன்முறை ஒளிபரப்பு திட்டத்தை (Digital Broadcasting Road Map) தயாரிப்பதற்கு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் கருத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, ஜப்பான் JICA கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வைத் தொடர்ந்து, இலங்கைக்கு ஏற்றவாறு ஜப்பானிய ISDB - T தொழில்நுட்பத்தை உருவாக்க முன்மொழியப்பட்டது. இதன்படி, 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போதைய வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் 2014 ஒக்டோபர் மாதத்தில் ஜப்பானுடன் சலுகைக் கடன் ஒப்பந்தம் (Soft Loan Agreement) ஒன்றை மேற்கொண்டது.

2021 டிசம்பரில் நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டிருந்த இந்தத் கருத்திட்டம் திட்டமிட்டபடி செயல்படுத்தப்படாததால், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மற்றும் தொழில்நுட்ப அமைச்சரால் 2021 ஏப்ரல் 21 தேதியிட்ட “ஜப்பான் கடனுதவியுடன் இலங்கையின் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம் (SL-P112) எனும் தலைப்பினலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அப21க/0621க/316/016 மற்றும் 2021.04.28 ஆம் திகதி எடுக்கப்பட் தீர்மானத்திற்கு அமைய இந்தக் கருத்திட்டத்தை இற்றைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை (Digital) மாற்றியமைப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு மிகப்பெரிய நன்மை என்னவெனில் தற்போது பயன்பாட்டில் உள்ள அதிர்வெண் அலைவரிசையை (Frequency Spectrum) அதிகமாக வெளியிடும் திறன் உள்ளது. எனவே, அந்த அதிர்வெண் வரம்பானது 5G கம்பங்கள் இன்றிய (Broadband) சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுத்த முடியும். இதன் மூலம் தொழில்நுட்பத்தை கிராமங்களுக்கும் எடுத்துச்செல்ல முடியும். அதே போன்று எதிர்காலத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையையும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

அனைத்து ஒளிபரப்பாளர்களினால் பேணிவரப்படும் தனியான ஒளிபரப்புக்குப் பதிலாக எண்ணியல் (Digital) ஒளிபரப்பு வலையமைப்பு இயக்குநர் (Digital Broadcast Network Operator -

DBNO) தனியான இயக்குநராக இயங்கும் நன்மையைக் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் பெறுகின்றார்.

காலாவதியான அனலாக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒளிபரப்பு நிலையங்களின் பராமரிப்புக்காக ஒளிபரப்பாளர்கள் ஆண்டுதோறும் நிறைய பணம் செலவழிக்க வேண்டும், மேலும் திட்டம் முடிந்ததும் அவர்கள் தனிப்பட்ட ஒளிபரப்பு வலையமைப்புக்களைப் பராமரிக்கத் தேவையில்லை. இது பராமரிப்பு செலவுகளையும் வெகுவாகக் குறைக்கும்.

(Analog) முறையியலில் உள்ள பலவீனமான சமிக்ஞைகளுக்குப் பதிலாக உயர் இலக்க (Digital) வீடியோ படங்களைப் பார்க்கும் திறன், பல தொலைக்காட்சிகளுக்குப் பதிலாக அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் வீட்டில் ஒரு எண்டெனாவை நிறுவும் திறன் மற்றும் ரசிக்கும் திறன் அனைத்து உள்நாட்டு அலைவரிசைகளும் சமமாக பார்வையிடும் நன்மை உயர் (High Definition - HD) தொலைக்காட்சி பார்வையாளருக்கு கிடைக்கும் நன்மையாகும்.

கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் இத்திட்டம் தொடர்பான அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் ஒலிபரப்பு நடவடிக்கைகளும் கொழும்பு தாமரைக் கோபுரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 17,717 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். (JICA) நிறுவனத்தின் பங்களிப்பு 13,717 மில்லியன் ஜப்பானிய யென் மற்றும் அரசாங்க பங்களிப்பு 3,505 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். இத்திட்டத்தின் உத்தியோகபூர்வ அறிமுக விழா 2021.12.28 அன்று மாண்புமிகு வெகுசன ஊடகத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

2024 டிசம்பர் 31 வரை கருத்திட்டத்தின் முன்னேற்றம்

கருத்திட்ட முகாமைப் பிரிவு தாபிக்கப்பட்டு இத்திட்டத்தின் பூர்வாங்க நிர்வாக நடவடிக்கைகள் 2021.07.15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2014.06.05 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 27 பணியாளர் பதவிகளில் 02 பதவிகளைத் தவிர 25 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய திட்டமிட்டிருந்த போதிலும், 2021.08.23 ஆம் திகதி 05 பேருக்கு மாத்திரமே திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது. அதன் பிறகு தற்போது மூன்று பேர் கொண்ட பணியாளர்களைக் கொண்டு இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, அபிவிருத்தித் திட்டங்களின் கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய தேசிய இயக்க (NOR) குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின்படி இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட பணிக்குழு மூலம் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i. இது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனை உதவி ஜப்பானில் இருந்து பெறப்பட வேண்டும் என்பதால் துஜஊயு நிறுவனத்தின் இணக்கத்தின் பேரில் கொள்முதல் முறையின்படி திட்ட ஆலோசகரைத் தேர்ந்தெடுக்க அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவால் (CAPC) தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, 2022.08.08 ஆம் திகதிய அமைச்சரவை முடிவின் பிரகாரம் அப்போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து ஜப்பானிய திட்டங்களுக்கும் நிதி வழங்குவதை JICA நிறுவனம் தற்காலிகமாக நிறுத்திய காரணத்தினால் அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பொறியியல் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டது.

ii. 2022 ஏப்ரல் மாதம் முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தக் கருத்திட்டத்தை, 2024 ஜூலை முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2024.07.26 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரதமர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கருத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஏதேனும் தடைகள் இருப்பின் அதனை அறிவிக்குமாறும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த அமைச்சினால் 2024.08.23 ஆம் தகதி கருத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆலோசனை கோரி தேசிய செயல்பாட்டு மையத்திற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் அதன் தலைவர் ஆலோசனை நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குத் தேவையான அனுமதி அமைச்சரவையினால் வழங்கப்பட்டிருப்பதனால் அதற்கேற்ப செயல்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2024.10.04 ஆம் திகதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கருத்திட்டத்தை மதிப்பிடுவதற்கு ஒரு விசேட குழுவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 2024.12.30 ஆம் திகதி உரிய துறைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கருத்திட்டத்தின் மேல் நடவடிக்கைகளை மேற்கொவைதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

iii. கருத்திட்டத்தின் நிரமாணப் பணிகளுக்கு இணைவாக தற்போதைய புவிசார் (Analog) ஒளிபரப்பு பணி இந்த திட்டத்தின் மூலம் நிறைவுசெய்யப்படும். மேலும் புதிய டிஜிட்டல் (Digital) முறையை செயல்படுத்த நாட்டில் தொடர்புடைய சட்ட அமைப்பு முழுமையாக திருத்தப்பட வேண்டும். அதற்கிணங்க, இந்த வரைவு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இறுதியில் டிஜிட்டல் ஒளிபரப்பு வலையமைப்பு இயக்குநர் (DBNO) நிறுவப்படும். இதற்கு சுமார் 02 வருடங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தற்போது சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

iv. பரிந்துரைக்கப்பட்டபடி நாடு முழுவதும் பரவியுள்ள 16 ஒளிபரப்பு நிலையங்களை நிறுவுவதற்கு தேவையான காணியை கையகப்படுத்துவதும் இந்த திட்டத்தின் ஆரம்ப கட்டங்களில் ஆலோசனை சேவைகளை தொடங்குவதற்கு முன் செய்யப்பட வேண்டும். எனவே, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை மற்றும்

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றுடன் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைவு அந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய காணிகளை கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன.

v. இந்தக் கருத்திட்டத்திற்காக 2023.07.12 ஆம் திகதி ஜப்பான் வழங்கிய தொழில்நுட்பத் தரங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிக்கையை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மதிப்பீடு செய்துள்ளது. மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட விடயங்களை; அடங்கிய அறிக்கை ஜப்பானிய தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் அவதானிப்புகளைப் பெற்ற பின்னர் அந்த அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

vi. 2024 ஜூலை இறுதி வரை JICA திட்டத்திற்கான நிதியுதவி வழங்கும் பொறிமுறையை ஆரம்பிக்காத காரணத்தினாலும் பொறியியல் ஆலோசனை நிறுவனம் ஆண்டு இறுதி வரை ஒப்பந்தம் செய்யப்படவில்லை என்பதாலும், ஆரம்ப கருத்திட்டப் பணிகள் இரண்டு ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டதாலும், கருத்திட்டச் செலவு இன்றுவரை குறைந்தபட்ச மட்டத்தில் உள்ளது. அதற்கமைய 2024 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு ஒதுக்கீடு ரூ.50 மில்லியன் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கீடுகள் ரூ.100 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2024 டிசம்பர் 31 வரையிலான செலவு ரூ. 6.9 மில்லியன் ஆகும்.

2.2 சவால்கள்

2.2.1 நட்டத்தில் இயங்கும் ஊடக நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்

தனியார் ஒளிபரப்பு அலைவரிசைகள், அச்சு ஊடகங்களைப் போலன்றி கலாசாரத்தைப் பாதுகாத்து அத்தோடு பண்பாட்டையும் பாதுகாத்த வண்ணம் செயற்படவேண்டியது அரசாங்க ஊடக நிறுவனங்களின் பொறுப்பாகும். ஆயினும், தற்போது போட்டிமிக்க சூழலில் தரத்திற்குப் பதிலாக முறையற்ற ஒளிபரப்பு வகைப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் ஒளபரப்பு அலைவரிசைகளுக்கு விளம்பரங்களை வழங்குவதன் மூலம் மீண்டுவரும் செலவினங்களை தீர்த்துக்கொள்வதற்கேனும் அரசாங்க ஊடக நிறுவனங்கள் உழைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. தேசிய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை தயாரித்தல் மற்றும் போட்டிமிக்க நிகழச்சிகளை தயாரித்தல் என்பன ஒன்றுக்கொன்று முரணான விடயங்களாகும். இந்த நிறுவனங்கள் நட்டமடைவதற்கு பிரதான காரணம் தாங்க முடியாத மேந்தலைச் செலவினமாகும். இவ்வாறான நிறுவனங்கள் ஆகக் குறைந்தது நடு நிலமையைப் பேணுவதற்கு அல்லது மீள்கட்டமைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2.2.2 இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக எண்ணியல் (Digital) தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தொடர்முறை (Analog) தொழில்நுட்பத்திற்குப் பதிலாக உலகின் பல நாடுகள் புதிய தொழில்நுட்ப நிலமையின் கீழ் விருத்தி செய்யப்பட்ட

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை தொலைக்காட்சித் துறையிலும் அறிமுகம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். விசேடமாக தொடர்முறை தொழில்நுட்பம் மறைந்து செல்வதினால் அந்த தொழில்நுட்பத்தின் மீதான ஒளிபரப்பு உபகரணங்கள் எதிர்காலத்தில் பராமரிப்பது பிரச்சினைக்குரியது. இந்தக் கருத்திட்டத்திற்குத் தேவையான ஆளணியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் 2028 ஆம் ஆண்டின் இலக்கிடப்பட்ட வேலைத்திட்டங்கள் நிறைவுசெய்வதற்கு தனியார் ஊடக நிறுவனங்களை தொடர்புபடுத்திக்கொள்வதும் சவால் மிக்கது.

2.2.3 ஊடகவியலாளர்களின் தொழில்வான்மையை மேம்படுத்தல்

தற்காலத்தில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாத்திரங்களில் மிகவும் சக்திமிக்க மற்றும் தீர்க்கமான காரணியாக ஊடகம் மாறியுள்ளது. மக்களுக்கு தகவல்களை அடையச் செய்யும் பொருட்டு வெகுசன ஊடகத்துறை நேர்முறையான பங்களிப்பை வழங்குகின்றது. அதன் மூலம் நல்லாட்சியை கொண்டு செல்வல முடியும்.

இலங்கையில் சனநாயகத்தைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் போது சுதந்திரமான, சுயாதீனமான மற்றும் மக்கள் நேயமிக்க ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவது அவசியமாகும். இந்தப் பணிக்காக நல்லாட்சி பற்றிய செயன்முறையை நல்லாட்சியையும், சனநாயகத்தையும் வலுப்படுத்துவதில் ஊடக தரப்புக்க பாரிய பங்கு உண்டு. நாட்டில் காணப்படும் பல்லின மற்றும் திறந்த ஊடக கலாசாரத்தை நிறுவும் பொருட்டு தொழில்மறை ரீதியில் வலுவான ஊடக சமூகமொன்று காணப்படுதல் வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்கும் நிறுவனமொன்றை நிறுவும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஊடகங்கள் சமூகங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியிருப்பதனால் உயர் ஊடக தரங்களைப் பேணி வருவதை உறுதி செய்யும் வகையில் ஏற்புடைய ஊடக ஒழுக்க விழுமியங்களுக்கு ஏற்ப தொழில்முறை ஊடகவியலாளர்களை உருவாக்குவதன் மூலம் சிறந்த ஊடகப் பாவனையின் உச்சத்தை அடைந்துகொள்வதற்கு சமூகப் பொறுப்பை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமொன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் சர்வதேச போக்குகள் காரணமாக வெகுசன ஊடக துறையில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவ்வாறான மாற்றங்களை செய்யும் போது தொழில் அபிவிருத்தி, திறன் விருத்தி மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக தொடர்ச்சியான கல்வி நிறுவனமொன்றை நிறுவுவது அத்தியவசியமாகும். அதற்கிணங்க உத்தேச ஊடக நிறுவனத்தை நிறுவுவது கட்டாய அவசியமாகும்.

2.2.4 பக்கச்சார்பு அற்ற தரமுறையொன்றை அறிமுகம் செய்தல்.

ஒலிபரப்பு மற்றும் விளம்பர பிரச்சாரத்தின் போது ஒலிபரப்பு தரங்கள் தீர்க்கமான காரணியாக மாறியுள்ளது. ஒலிபரப்பு நிலையங்களின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் போது உள்ளடக்கத்தைக்கூட சவாலுக்கு உட்படுத்தக்கூடிய பொருளாதார அறிவாற்றல் சம்மற்ற வீதத்தில் கட்டுப்படுத்தும் ஆற்றல் தரப்படுத்தும் தரவுகளுக்கு உண்டு. அரசாங்க வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் மாத்திரம் இருந்த காலப்பகுதியில் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. 1992 ஆம் ஆண்டில் ஒளிபரப்பு துறையின் எல்லைகளை தளர்த்தப்பட்ட பின்னர் தனியார் நிறுவனங்களுக்கு இடம் வழங்கிய பின்னர் தரப்படுத்தல் முறை ஆரம்பமானது. விளம்பரகாரர்களினால் தரப்படுத்தல் விரிவாக பயன்படுத்தப்பட்ட போதிலும்

சில ஒளிபரப்பு நிறுவனங்கள் இந்த முறைதொடர்பில் திருப்தியுடன் இல்லை. எனவே, இந்த அமைச்சினால் பக்கச்சார்பற்ற தரப்படுத்தல் முறையொன்று அறிமுகம் செய்யப்படுதல் வேண்டும்.

2.2.5 ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை அறிமுகம் செய்தல்.

தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் நிகழும் மாற்றங்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது தற்காலத்தில் காணப்படும் பொறிமுறையில் உள்ள ஒழுங்கீனம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காணப்படும் சிக்கல் தன்மை அவ்வாறே எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஊடகங்களின் நடத்தையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பினரையும் வழிநடாத்துவதற்கு சுயாதீன நிறுவனமொன்று காணப்படுதல் வேண்டுமென அவதானிப்புச் செய்யப்படுகின்றது.

2.2.6 அரசாங்க ஊடக நிறுவனங்களின் தொழில்நுட்ப பதவிகளுக்கு புதியவர்களைக் கவர்வதற்கு முடியாமல் இருத்தல்.

2.2.7 அரசாங்க ஊடக நிறுவனங்களை நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு வலுவூட்டல்.

2.2.8 சமூக ஊடகங்களின் எதிர்மறையான தாக்கம்.

2.3 எதிர்கால இலக்குகள்

i. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ள ஊடக கலாசாரமொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்துதல்களை நடைமுறைப்படுத்தல்.
ii. நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் தகவல்களை அணுகுவதை விரிவுபடுத்தல்.
iii. ஊடகவியலாளர்களை அறிவு மற்றும் அனுபவத்தால் வலுப்படுத்தல்.
iv. ஊடக அறிவை மேம்படுத்தல்
v. ஊடகக் கொள்கையொன்றை அறிமுகம் செய்தல்
vi. ஊடக ஒழுக்கவிழுமிய முறைமையொன்றை அறிமுகம் செய்தல்

செயலாளர்

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

அத்தியாயம் 03

2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024		குறிப்பு	உண்மை நிலை 2024	உண்மை நிலை 2023	
185,000,000	**வருமானப் பெறுகைகள்**		123,750,000	150,450,000	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
185,000,000	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	123,750,000	150,450,000	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	ஏசீஏ-1
185,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		123,750,000	150,450,000	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		**187,869,016**	564,219,386	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		175,358,000	553,043,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		1,579,514	946,670	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		10,931,502	10,229,716	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**187,869,016**	564,219,386	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**311,619,016**	714,669,386	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**4,365,924**	6,164,264	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**307,253,091**	708,505,123	
	கழி : செலவினம்				
638,395,000	**மீண்டுவரும் செலவினம்**		**543,576,723**	827,214,875	ஏசீஏ-2(ii)
138,170,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	119,612,871	114,635,419	ஏசீஏ-2(ii)
137,900,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	81,169,803	87,700,038	ஏசீஏ-2(ii)
362,325,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	342,794,049	624,856,830	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	22,588	ஏசீஏ-2(ii)
638,395,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**543,576,723**	827,214,875	
432,500,000	**மூலதனம் செலவினம்**		**185,723,028**	144,918,430	
31,000,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	19,907,853	24,190,683	ஏசீஏ-2(ii)
6,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	3,861,699	5,956,540	ஏசீஏ-2(ii)
216,000,000	மூலதன மாற்றல்கள்	12	151,120,978	53,393,575	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீஏ-2(ii)
4,500,000	திறன் விருத்தி	14	3,926,278	3,424,493	ஏசீஏ-2(ii)
175,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	6,906,221	57,953,140	ஏசீஏ-2(ii)
432,500,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**185,723,028**	144,918,430	
	வைப்புக் கொடுப்பனவுகள்		7,478,223	1,870,110	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		10,690,378	11,692,556	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**18,168,601**	**13,562,666**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		747,468,351	985,695,972	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(440,215,260)	(277,190,849)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(440,616,526)	(277,190,849)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		401,266	-	ஏசீஏ-3
			(440,215,260)	(277,190,849)	

1

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2024 ரூபா	உண்மை நிலை 2023 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	405,270,240	401,408,541
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	17,700,319	17,941,443
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**422,970,559**	**419,349,984**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		15,965,991	10,709,671
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		405,270,240	401,408,541
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	1,333,063	7,231,771
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	401,266	-
மொத்தப் பொறுப்புக்கள்		**422,970,559**	**419,349,984**

பக்க இலக்கம் 9 முதல் 47 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 48 முதல் 53 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

....	....	....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 25. 02 .2025	திகதி :	திகதி : 24-02-2025
Dr. Anil Jasinghe Secretary Ministry of Health & Mass Media "Suwasiripaya" 385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10		J.R. Denawaka Chief Financial Officer - Mass Media Ministry of Health and Mass Media 163, "Asidisi Medura" Kirulapona Avenue, Polhengoda, Colombo 05.

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2024 **ரூபா**	**2023** **ரூபா**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	123,750,000	150,450,000
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	18,846,911	14,445,202
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	175,358,000	553,043,000
முற்பணங்களை அறவிடல்	8,641,047	8,371,179
வைப்புக்களின் பெறுகை	1,579,514	946,670
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**328,175,473**	**727,256,052**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	237,594,604	337,737,054
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	64,807,049	355,616,830
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	492,083	9,743,742
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	4,365,924	6,164,264
முற்பணக் கொடுப்பனவு	9,174,624	10,167,512
வைப்புக் கொடுப்பனவு	7,478,223	1,870,110
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**323,912,508**	**721,299,512**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**4,262,965**	**5,956,540**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	3,861,699	5,956,540
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	**3,861,699**	**5,956,540**
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)		
	(3,861,699)	**(5,956,540)**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)		
	401,266	-
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		
	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		
	401,266	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	401,266	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

அறிக்கையிடும் அடிப்படை

1. **தயாரிப்பதற்கான நோக்கம்**

   நிதிக் கூற்றுக்கள், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதி அரச கணக்குகள் வழிகாட்டு நெறிகள் இலக்கம் 06/2024 இன் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

2. **அறிக்கையிடப்படும் காலப்பகுதி**

   2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்கான காலப்பகுதியாகும்.

3. **அளவீட்டின் அடிப்படை**

   நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் மீது தயாரிக்கப்பட்டுள்ளதோடு, சில சொத்துக்களின் வரலாற்றுச் செலவு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு விருத்தி செய்யப்பட்டுள்ளது. வேறு முறையில் குறிப்பிடப்படாதபோது கணக்குகளைத் தயாரிக்க விருத்தி செய்யப்பட்ட பணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

   நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

4. **வருமானங்களை இனம்காணல்**

   பரிமாற்றம் செய்யக்கூடிய மற்றும் பரிமாற்றம் செய்யமுடியாத வருமானங்கள் அவை பெறப்பட வேண்டிய காலப் பிரிவைக் கருத்திற்கொள்ளாது பணம் கிடைக்கப்பெறும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படும்.

5. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை இனம்காணல் மற்றும் அளவிடல்**

   சொத்துக்கு ஏற்புடைய எதிர்கால் பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் என்ற உறுதிப்பாடு உள்ளபோது மற்றும் அந்தச் சொத்துக்கள் சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என இனம்காணப்படும்.

   சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவுக்கு இனம்காணப்படுவதோடு செலவு மாதிரி ஏற்புடையதாகாத சந்தர்ப்பங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படும்.

6. **சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு**

   இந்த ஒதுக்கு கணக்கு சொத்து,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு நேரொத்த கணக்காகும்.

7. **காசும் காசுக்கு சமமானவையும்**

   2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கையிலுள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளைக் கொண்டு காசும் காசுக்கு சமமானவையும் கணக்கிடப்படும்.

- ஏதேனும் அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விசேடமான கொடுக்கல் வாங்கல்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் அந்த தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிக்கொள்ள முடியும். அவ்வாறே, "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் அந்த விசேட கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்களை உள்ளடக்க முடியும்.
- தனது அறிக்கையிடும் நிறுவனத்திற்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைகளை மாத்திரம் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்த முடியும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1002-13-00	டெலி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்கான வரி	185,000	185,000	123,750	67%

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதிஒதுக்கீடு		
மீண்டுவரும்	628,900	638,395	543,577	85%
மூலதனம்	422,500	432,500	185,723	43%
மொத்தம்	1,051,400	1,070,895	729,300	68%

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா, 000

தொ. இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை யான செலவின ம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	தேர்தல் ஆணைக்குழு	2024 சனாதிபதித் தேர்தல் பணியாட்களுக் கான கொடுப்பனவு	271	271	270	100%
02	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்க ளிடமிருந்து ஆதனக் கடன் மீதிகளை அறவிடல்	222	222	222	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றகை

ரூபா ,000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 திகதியசுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	2024.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	57,533	57,533	-	100%
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	86,875	86,875	-	100%
9153	காணி	257,000	257,000	-	100%
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-	-	

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளரின் அறிக்கையின் சிங்களப் பிரதி இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள்
(செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

	குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%)உண்மையான வெளியீடு			
		100% - 90%	75% - 89%	50% - 74%	0% - 49%
1	ஒளிபரப்பு சட்டத்தை வரைதல்	100%	-	-	-
2	தகவல் அறியும் உரிமையை ஊக்குவிப்பதற்காக அலுவலர்களை அறிவூட்டல்	100%	-	-	-
3	தொழில்துறை ஊடகவியலாளர்களை உருவாக்குதல்				
3.1	எசிதிசி ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்	100%	-	-	-
3.2	ஊடகவியலாளர்களுக்கு உயர் கல்வி நிறுவனமொன்றை தாபிப்பதற்கான சட்டமூலத்தை வரைவு செய்தல் (இலங்கை பட்டய ஊடக நிறுவனம்)	100%	-	-	-

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) பூரணப்படுத்தும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

பொறுப்புள்ள ஊடக சம்பிரதாயமொன்றை உருவாக்குவதற்கு வசதியளிப்பதோடு, ஊடக செயற்பாட்டின் சிறப்பை நோக்கிப் பயணித்தல்.

இலக்கு / குறிக்கோள்	அடைவுகள் (உகலாவிய)	அடைந்துகொள்வதற்கான குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75%- 100%
4.தரமான கல்வி	4.4 2030 ஆம் ஆண்டளவில் தொழில்வாய்ப்பு, சுனிசி தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் தொழிற்திறன் உள்ளிட்ட ஏற்புடைய திறமைகள் உள்ள இளைய சமூகத்தையும் வயதுவந்த சமூகத்தையும் படிப்படியாக அதிகரித்தல்.	தேசிய ஊடக உயர் கல்வி நிறுவனத்தை நிறுவுவதற்காக (Chartered Institute of Journalists – Sri Lanka) சட்டத்தை வரைவுசெய்தல்			100%
		எசிதிசி வெகுசன ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்			100%
16. சமாதானம் நீதி மற்றும் வழுவான நிறுவனங்கள்	16.10 தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்க அமைய பொதுமக்கள் தகவல்களை அறிந்துகொள்வதிலுள்ள இயலுமையை உறுதிசெய்து அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்			
		அ) பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்			100%
		ஆ) தகவல் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்			100%

		(அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களும்)			
		இ) சர்வதேச தகவல் தினத்திற்காக செயலமர்வை ஒழுங்கு செய்தல்			100%
		ஈ) தகவல் உத்தியோகத்தர்களுக்கு கையேடுகளை அச்சிட்டு வழங்குதல்			100%

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

வெற்றிகள் :

i. தொழிற்துறை ஊடகவியலாளர்களை துறையில் உருவாக்கும் நோக்கில் தேசிய ஊடக நிறுவனமொன்றை நிறுவுவதற்கான கருத்திட்ட அறிக்கை இந்த அமைச்சினால் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அந்தத் திணைக்களம் கொள்கை ரீதியில் இந்தக் கருத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2020.08.09 ஆம் திகதிய இல 2187/27 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனமொன்றான இலங்கை மன்ற நிறுவனம் இந்த அமைச்சின் விடயப் பரப்பிற்குள் இணைக்கப்பட்ட பின்னர் அந்த நிறுவனத்துடன் இணைந்து இலங்கைப் பட்டய ஊடகவியலாளர் நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்ட வரைவு தாயரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

